# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2018.01.23

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 01/2018**

பல்கலைக்கழக துணைவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**விண்ணப்புதாரிகளுக்கு ஸ்கைப் / வீடியோ கருத்தரங்குகள் ஊடாக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வாய்ப்பளித்தல்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறிப்பிடப்படுபவர்களுக்கு தெரிவுக்குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு வாய்ப்பு இல்லாத சந்தர்ப்பங்களில் அவ்வாறான கூட்டங்களுக்கு ஸ்கைப் / வீடியோ கருத்தரங்கு வசதிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்ட 2010.07.08 ஆம் திகதிய 926 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கச் செய்யப்படுகின்றது.

02. அனைத்து கல்விசார் மற்றும் நிர்வாக ஆளணிப் பிரிவுகளுக்கான **ஆட்சேர்ப்புக்களின்போது** மாத்திரம் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் தினத்தில் விண்ணப்பதாரி வெளிநாடு சென்றிருந்தால், பெற்றுக்கொள்ள முடியுமான பிரகாரம் ஸ்கைப் / வீடியோ கருத்தரங்கு ஊடாக நேர்முகப் பரீட்சையை நடாத்துவதற்கான அனுமதியை வழங்குவதற்கு 2017.11.23 ஆம் திகதி நடைபெற்ற 976 ஆவது கூட்டத்தின்போது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் குறிப்பிட்ட விண்ணப்பதாரி அவ்வாறான வசதிகளைப் பயன்படுத்தி தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக, தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதியில் அவர் வெளிநாட்டில் இருப்பதற்கான எழுத்து மூலமான சாட்சிகளை வழங்கி நேரகாலத்துடன் ஏற்புடையதாகும் பிரகாரம் உயர் கல்வி நிறுவகம் / நிறுவகங்கள் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலமாக / மின்னஞ்சல் ஊடாக கோரிக்கை விடுத்தல் வேண்டும்.

03. மேற்குறிப்பிடப்பட்ட தீர்மானம் 2018.02.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

04. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.

12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவிநிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/3/85 (தொகுதி II )